இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 19-10-2023

# நாற்காலிச் சண்டை

“சட்டமன்றத்தில் மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல் யாருக்கு எந்த இடம் என்ற நாற்காலிச் சண்டையில் ஈடுபட்டுக் கிடக்கிறது” - என்று பழனி சாமியை விமர்சித்துள்ளார் விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அதுதான் முழு உண்மை ஆகும்.

**சட்டமன்றத்தில் ஒரே ஒரு பிரச்சினைக்காகத்தான் வேகவேகமாக பேசுவார் பழனிசாமி. அது தனக்குப் பக்கத்தில் யார் உட்காருவது என்பதுதான். தனக்குப் பக்கத்தில் பன்னீர்செல்வம் உட்கார்ந்திருப்பது பழனிசாமிக்கு பிடிக்கவில்லை. அதற்கு என்ன செய்ய முடியும்? அவர் ஒருங்கிணைப்பாளராக இருந்த கட்சிக்குத் தானே பழனிசாமி இணை ஒருங்கிணைப்பாளராக இருந்தார்? அவருக்கு துணை முதலமைச்சர் கொடுத்து வைத்துக் கொண்டவரும் இவர்தானே?**

**யாரை எங்கே உட்கார வைக்க வேண்டும் என்பது சபாநாயகரின் உரிமை, விருப்பம் சார்ந்தது - என்று பேரவைத் தலைவர் அப்பாவு சொல்லிவிட்டார். இதனை புரிந்துக்கொள்ளும் தன்மை பழனிசாமிக்கு இல்லை.**

“உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் உட்பட 11 பேர் இந்த அவையில் இரட்டை இலைச் சின்னத்தில் வெற்றி பெற்று வந்து, இரட்டை இலைக்கு எதிராக Floor test-ல் ஓட்டுப் போட்டதற்குப் பிறகு, Tenth Schedule of the Indian Constitution-படி அவர்களை பதவி நீக்கம் செய்திருக்க வேண்டும். அதை அப்போது செய்ய வில்லை. அவர்கள் தேவையென்றால் வைத்துக்கொள்கின்றார்கள். தேவை யில்லையென்று சொன்னால் அவர்கள் இஷ்டத்திற்கு முடிவெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு petition-ஐக்கொடுத்ததற்கு 18 எம்.எல்.ஏ.க்களை அ.தி.மு.க. ஆட்சியில் பதவி நீக்கம் செய்திருக்கின்றார்கள். ஆனால், எதிர்த்து ஓட்டு போட்டவர்கள் -மீது எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை” என்று பழனிசாமி காலத்தை நினைவூட்டி இருக்கிறார் பேரவைத் தலைவர் அப்பாவு.

**“அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக் கையில் இருந்து பன்னீர்செல்வத்தை மாற்றிவிட்டு ஆர்.பி.உதயகுமாருக்கு இடம் அளிக்க வேண்டும்”** என்று இப்போது சட்டசபையில் எழுப்பியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. இந்த பிரச்சினையில் அமளியில் ஈடு பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

“இந்த விவகாரத்தில் சபாநாயகர் அப்பாவு நடுநிலையுடன் செயல்பட வில்லை” என ஜெயக்குமார் குற்றம் சாட்டியிருக்கிறார். நடுநிலை என்றால் என்ன? அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நடந்து கொண்ட நடுநிலைமையின் கதையை அறிவோமா?

2001 சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற போது ஜி.கே.மூப்பனார் தலைமை யில் த.மா.கா. செயல்பட்டு வந்தது. அந்த தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றது த.மா.கா. காங்கிரஸ் கட்சிக்கும் சேர்த்து ஜெயலலிதாவிடம் மூப்பனார் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தினார். அதன்படி 47 தொகுதிகளை ஜெயலலிதா ஒதுக்கினார். அதில், 15 தொகுதிகளைக் காங்கிரஸுக்குக் கொடுத் தார் மூப்பனார்.

தேர்தலில் அ.தி.மு.க. வென்றது. த.மா.கா. 23 இடங்களிலும் காங்கிரஸ் 7 இடங்களிலும் வெற்றி பெற்றன. கொஞ்ச நாளிலேயே மூப்பனார் மறைந் தார். த.மா.கா.வுக்கு புதிய தலைவராக ஜி.கே.வாசன் நியமிக்கப்பட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு த.மா.கா.வை காங்கிரஸுடன் இணைக்க வாசன் முடிவு செய்தார். 2002-இல் மதுரையில் காங்கிரஸ் கட்சியில் த.மா.கா. முறைப்படி இணைந்தது. இரு கட்சிகளின் இணைப்புக்கு கிள்ளியூர் தொகுதி த.மா.கா. எம்.எல்.ஏவான குமாரதாஸ் எதிர்ப்பு தெரிவித்தார். அவருடன் இன்னும் சில த.மா.கா. எம்.எல்.ஏ-களும் சேர்ந்து கொண்டனர்.

காங்கிரசுடன் த.மா.கா. இணைந்தாலும் தங்களை த.மா.கா. எம்.எல்.ஏக்க ளாகவே கருத வேண்டும் என்று அன்றைய சபாநாயகர் காளிமுத்துவிடம் இந்த ஐந்து அதிருப்தி த.மா.கா. எம்.எல்.ஏக்களும் கடிதம் கொடுத்தனர். அதா வது அவர்களை ஆளும் கட்சியான அ.தி.மு.க. பின்னால் இருந்து இயக்கியது. ‘5 த.மா.கா. அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தொடர்ந்து த.மா.கா. எம்.எல்.ஏக்களா கவே செயல்படுவார்கள். த.மா.கா. என்று ஒரு கட்சியே இல்லை என்று தேர் தல் ஆணையம் அறிவித்தால் அப்போது இந்த 5 எம்.எல்.ஏக்களின் பதவி குறித்து முடிவு செய்யப்படும்” என்று சபாநாயகர் காளிமுத்து அறிவித்தார். இணைப்புக்குப் பிறகு த.மா.கா.வின் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் ரத்து செய்தது.

த.மா.கா. அங்கீகாரத்தைத் தேர்தல் கமிஷன் ரத்து செய்த நிலையில், குமா ரதாஸ் உள்ளிட்ட 5 எம்.எல்.ஏக்களை எக்கட்சியையும் சேராதவர்கள் என்று அறிவிக்க வேண்டும் என சட்டசபை காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்ர மணியம் கோரிக்கை வைத்தார். இந்த விவகாரத்தில் சபாநாயகர் காளிமுத்து நடுநிலையாகச் செயல்படவில்லை. அன்றைய முதல்வர் ஜெயலலிதாவின் கண்ணசைவுக்கு ஏற்றார் போல நடந்து கொண்டார். “குமாரதாஸ் உள்ளிட்ட 5 எம்.எல்.ஏக்களும் தனி அணியாகச் செயல்படுவர். அவர்கள் த.மா.கா. எம்.எல்.ஏக்களாகவே கருதப்படுவார்கள். அவர்களுக்குச் சட்டசபையில் தனி இடம் ஒதுக்கப்படும்” என்று சபாநாயகர் காளிமுத்து அறிவித்தார். ‘சட்டசபை யைப் பொறுத்தவரை எனது முடிவே இறுதியானது” என்றார். ஐந்து பேரும் த.மா.கா.விலேயே நீடிப்பார்கள் என்று காளிமுத்து கூறியதன் மூலம் தேர்தல் கமிஷனால் நீக்கப்பட்ட த.மா.கா. சட்டமன்றத்தில் மட்டும் செயல்படும் நிலைக்கு தள்ளப்பட்டது.

குமாரதாஸ் உள்ளிட்ட 4 பேரை கட்சி தாவல் சட்டத்தின் கீழ் எம்.எல்.ஏ. பதவியில் இருந்து நீக்க வேண்டும் சென்னை உயர் நீதிமன்றத்தில் காங்கிரஸ் சார்பில் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் மனு தாக்கல் செய்தார். விளக்கம் அளிக் குமாறு சபாநாயகர் காளிமுத்துவுக்குச் சென்னை உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது. ஆனால் எந்த பலனும் ஏற்படவில்லை.

இதேபோலத்தான் 2011 - 2016 ஆட்சிக் காலத்திலும் அ.தி.மு.க. நடந்து கொண்டது.

**2011 - 2016 அ.தி.மு.க. ஆட்சியில் தே.மு.தி.க-வின் 29 எம்.எல்.ஏ-களில் சிலர் தொகுதி பிரச்சினைக்காக (?) ஜெயலலிதாவைச் சந்தித்து அவரை ஆதரித்த அவலம் நடந்தது. மாஃபா பாண்டியராஜன், தமிழழகன், அருண் சுப்பிரமணியன், அருண் பாண்டியன், மைக்கல் ராயப் பன், சாந்தி, சுந்தரராஜன், சுரேஷ் ஆகியோருக்கு சிவப்பு கம்பளம் விரித்து சட்டசபையில் அவர்களுக்குத் தனியாக இருக்கைகளும் பேச வாய்ப்பு களும் கொடுத்தவர் சபாநாயகர் ஜெயக்குமார். பிறகு ஜெயக்குமார் சபா நாயகர் நாற்காலியில் இருந்து தூக்கப்பட்ட பிறகு வந்த தனபாலும் அதே பாதையில் பயணித்தார்.**

**இதுதான் அ.தி.மு.க. அன்று நடந்து கொண்ட முறை. எனவே, நடு நிலையை பற்றி யாருக்கும் பாடம் எடுக்கும் தகுதி அ.தி.மு.க.வுக்கு இல்லை.**

**நாளையோ - நாளை மறுநாளோ பழனிசாமியும் - பன்னீர் செல்வமும் ஓரணி ஆக மாட்டார்கள் என்று சொல்ல முடியுமா? இவர்கள் விருப்பத்துக்குத் தகுந்த மாதிரி வாசலை மாற்றிக் கட்ட முடியுமா?**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.10.2023) செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில், “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில், பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டதில், கிராமக் கணக்குகளில் உரிய மாறுதல் மேற்கொள்ளப்படாமல் இருந்த பட்டாக்கள் சரி செய்யப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, 16,496 பட்டாக்கள் கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்டு, அதற்கான பட்டாக்களை வழங்கிடும் அடையாளமாக 15 பயனாளிகளுக்கு கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல்நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.த.பிரபு சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடு கட்டி குடியிருப்போருக்கு

# கிராமக் கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மறைமலைநகரில் நடைபெற்ற “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டக் கூட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கினார்!

**மறைமலைநகர், அக். 19 -**

**பல ஆண்டுகளாக அரசு நிலங்க ளில் வீடுகளைக் கட்டி குடியிருப் போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் வழங்கப் பட்ட வீட்டுமனைப் பட்டாக்களில், கிராமக் கணக்குகளில் உரிய திருத் தங்கள் மேற்கொள்ள கோரிய பொதுமக்களின் கோரிக்கையை முதல்வர் நிறைவேற்றினார். “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்ட ஆய் வுக் கூட்டத்தில் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிராம கணக்குகளில் மாறுதல் செய் யப்பட்ட பட்டாக்களை பயனாளி களுக்கு வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.10.2023) செங்கல்பட்டு மாவட் டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத் தின் கூட்டரங்கில், “கள ஆய்வில் முத லமைச்சர்” திட்டத்தின் கீழ், செங்கல் பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங் களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களு டனான ஆய்வுக் கூட்டத்தில், பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடுகளைக் கட்டி குடியிருப் போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டதில், கிராமக் கணக்குகளில் உரிய மாறு தல் மேற்கொள்ளப்படாமல் இருந்த பட்டாக்கள் சரி செய் யப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதற்கி ணங்க, 16,496 பட்டாக்கள் கிராம கணக்குகளில் மாறு தல் செய்யப்பட்டு, அதற்கான பட்டாக்களை வழங்கிடும் அடையாளமாக 15 பயனாளி களுக்கு கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்ட பட்டாக் களை வழங்கினார்.

### குடியிருப்புகளை வரன்முறைப்படுத்த நடவடிக்கை!

நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தை வெளி, மயானம் மற்றும் பாட்டை என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள் அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக உப யோகத்தில் இருந்து அதில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடி யிருப்போ ருக்கு அந்நிலங்கள் அரசின் உபயோகத்திற்கு தேவை இல்லை எனில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவ லர் ஆகியோரைக் கொண்ட குழு அந்த நிலங்களை தணிக்கை செய்து உள்ளாட்சி மன்றங்களில் தீர்மானங் களை பெற்று தகுதியின் அடிப்படை யில் குடியிருப்புகளை வரன்முறைப் படுத்த தமிழ்நாடு அரசால் ஆணை யிடப்பட்டது.

மேலும், சென்னை புறநகர்ப் பகுதி, நகராட்சி மற்றும் மாநகராட்சி எல்லைக்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட தடையாணை யும் ஒருமுறை மட்டுமே வரன் முறை செய்து வீட்டுமனை ஒப்படை வழங்கும் திட்டத்திற்கு முன்னர் தளர்வு செய்யப்பட்டது.

மேற்படி அரசாணைகளின் அடிப் படையில், மாநிலம் முழுவதும் ஆட் சேபனை உள்ள மற்றும் ஆட்சேப னையற்ற அரசு நிலங்களில் வீடுகள் கட்டி பத்தாண்டுகளுக்கு மேலாக குடியிருப்பவ ருக்கு வீட்டுமனை ஒப் படை வழங்க ஏதுவாக மாவட்ட ஆட் சித் தலைவருக்கு வழங்கப்பட்ட அதி காரத்தின் அடிப்படையில் செயல்முறை ஆணைகள் வழங்கப்பட்டு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட் டன.

### பொதுமக்களின் கோரிக்கை பரிசீலிப்பு!

அவ்வகையில், 2000 2011 காலகட்டங்களில் வழங்கப்பட்ட வீட் டுமனைப் பட்டாக்கள் கிராமக் கணக் குகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டு நத்தம் அடங்கலில் ஏற்றப்படாத தால், தங்களால் அதிகாரப்பூர்வ மான பரிவர்த்தனை/வங்கி கடன் பெற இயலவில்லை என்று திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட பொதுமக்களிட மிருந்தும் மக்கள் பிரதிநிதிகளிட மிருந்தும் தொடர்ந்து கோரிக்கைகள் வரப்பெற்றன.

இக்கோரிக்கைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட வீட்டு மனைப் பட்டாக்களின் கிராமக் கணக் குகளில் உரிய திருத்தங்கள் மேற் கொண்டு, பட்டா வழங்கப்பட்ட விவரங்களை கிராம நத்தம் அடங் கல் மற்றும் வட்ட அலுவலகங்களில் பராமரிக்கப்படும் கணினி மயமாக் கப்பட்ட நத்தம் தரவுகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளும் பணி களை விரைந்து முடித்திட வேண் டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் அறிவுறுத்தினார்.

### செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்ட மக்களுக்கு பட்டா வழங்கல்!

அதன்படி, முதற்கட்டமாக செங் கல்பட்டு மாவட்டத்தில் 8136 பட்டாக் களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3949 பட்டாக்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 4411 பட்டாக்களும், என மொத்தம் 16,496 பட்டாக்கள் கிராம கணக்குகளில் மாறுதல் செய் யப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் நேற்று நடைபெற்ற கள ஆய்வில் முதலமைச்சர் திட்ட ஆய்வுக் கூட்டத் தில் 15 பயனாளிகளுக்கு கிராம கணக்குகளில் மாறுதல் செய்யப் பட்ட பட்டாக்களை வழங்கினார்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டத் தில் 3256 பட்டாக்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 9 பட்டாக்களும், திரு வள்ளூர் மாவட்டத்தில் 197 பட்டாக்க ளும், என மொத்தம் 3462 பட்டாக் கள் கிராமக் கணக்குகளில் மாறுதல் செய்யும் பணிகள் நடை பெற்று வரு கின்றன. இப்பணிகளும் விரைவில் நிறைவு பெறும்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்தி ரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட் சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட் சித் தலைவர் மரு.த.பிரபு சங்கர், சென்னை மாவட்ட ஆட்சித் தலை வர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.






தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 3வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் சேலம் சட்டக் கல்லூரியில் சனிக்கிழமை 14.10.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை மாநில நிர்வாகிகள், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் மற்றும் மாவட்ட அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர். இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை, பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள்மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்குப் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.